# மொரட்டுவ பல்கலைக்கழகம்

## பல்கலைக்கழக அனுமதி - கல்வி ஆண்டு 2025/2026

# மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சைக்காக விண்ணப்பம் கோரல்

(i) கட்டிடக்கலை பட்டம்
(ii) வடிவமைப்பு பட்டம்
(iii) நிலச்சீரமைப்பு கட்டிடக்கலை பட்டம்
(iv) ஆடையலங்கார வடிவமைப்பு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி பட்டம்

மேற்கூறப்பட்ட நான்கு (04) பட்ட கற்கை நெறிகளுக்கான தகுதிகாண் பரீட்சைக்கு தோற்றுவதற்கு உத்தேசிக்கும் விண்ணப்பதாரர்கள் அந்தந்த கற்கை நெறியின் கீழ் 2025/2026 கல்வி ஆண்டிற்காக பல்கலைக்கழக பிரவேசக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும். விண்ணப்பதாரர்கள் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் https://uom.lk/ எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து குறித்த விண்ணப்பப் படிவங்களை நிகழ்நிலையில் (Online) பூர்த்தி செய்தல் வேண்டும்.

இயைபுடைய விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழகத்தின் (https://uom.lk/) இணையதளத்திற்குப் பிரவேசித்து மேற்கூறப்பட்ட தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு பூர்த்தி செய்திருக்க வேண்டிய ஆகக் குறைந்த தகைமைகள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

நிகழ்நிலையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை (Online Application) இயைபுடைய ஆவணங்கள் சகிதம் 2026 மே மாதம் 06ஆம் திகதி பி.ப. 6.00 மணிக்கு முன் நிகழ்நிலை (Online) ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். இந்தத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலதிக தெளிவுபடுத்தல்களுக்கு admissions@uom.lk எனும் மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தவும்.

பல்வேறு காரணங்களினால் பெறுபேறுகள் வழங்கப்படாத மாணவர்கள் மற்றும் தகுதிகாண் பரீட்சைக்குத் தேவையான ஆகக்குறைந்த அடிப்படைத் தகுதிகளைப் (S சித்தி 3) பூர்த்தி செய்திராத ஆனால் க.பொ.த (உயர் தர) 2025 பரீட்சை பெறுபேறுகளை மீளப் பரீட்சிப்பதற்காக தற்போது விண்ணப்பித்துள்ள மற்றும் தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு உத்தேசிக்கும் மாணவர்கள் தயவு செய்து "admissions@uom.lk" எனும் மின்னஞ்சலுக்கு மின்னஞ்சல் செய்தியொன்றை அனுப்பவும்.

**பதிவாளர்,**
**மொரட்டுவ பல்கலைக்கழகம்,**
**கட்டுபெத்த,**
**மொரட்டுவ.**
**2026-04-07.**